# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1277/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விமல் | க–பெ | அமிர்தராஜா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 45/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.09.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஆசிரியையாக பணி செய்து வருகிறேன். எனது மாமியார் தைனீஸ்மேரி என்பவர் 03.06.2019 அன்று வீட்டில் இருந்த கிளம்பி சூடாமணிபுரம் நான்கு விளக்கு சாலையில் உள்ள சுப்பையா கிளினிக்கு சிகிச்சைக்காக ஆட்டோவில் சென்றுவிட்டார். இரவு 8.30 மணியளவில் எஸ்ஏர் பெட்ரோல் பங்க் அருகில் நடந்து வந்து கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவர் வேகமாக இருசக்கர வாகனத்தை இயக்கி நடந்து சென்று கொண்டிருந்த மாமியார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக பக்கத்து வீட்டுக்காரர் மீனாள் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நான் சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவ இடத்தில் பார்த்தபோது அவருடைய வலது காதில் இரத்தம் வடிந்தது. அவரது மூக்கில் இரத்தம் வடிந்தது. அவரது பின்னந்தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரை சிகிச்சைக்காக ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கிருந்த மருத்துவர்கள் பார்க்க முடியாது என்றுசொன்ன காரணத்தால் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள் ஆனார் நாங்கள் அங்கு செல்லாமல் மானகிரியில் உள்ள அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அரசு மருத்துவமனையில் இருந்தபோது நடந்த விபரங்களை சொல்லி காரைக்குடிவடக்கு காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். சிகிச்சை பலன் இன்றி எனது மாமியார் இறந்து விட்டார். **புகார் அசாஆ 1.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.23 19:16:03 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி